மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 100/22 |
| பெயர் | : | பரமசிவன் (PW1) |
| த/பெ. | : | லஷ்மணன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(A1 Balakrishannan A2 Pattu @ Pattukani are present. A3 Lakshmna Perumal is absent.Petition filed U/s.317 crpc and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13 th day of February 2024

**முதல் விசாரணை**

1)நான் சிங்கத்தகுரிச்சியில் வசிக்கிறேன்.நான் விவசாயம் செய்கிறேன்.சம்பவ காலத்தில் Cape காற்றாலை கம்பெனிக்கு சரள் அடிக்கும் ஒப்பந்த வேலை செய்துவந்தேன். சாட்சிகள் கருப்பசாமி மற்றும் சுரேசை தெரியும். ஆஜர் எதிரிகள் பாலகிருஷ்ணன் மற்றும் பட்டுகனி.3 வது எதிரி லஷ்மணபெருமாளை தெரியும்.

2)15.03.2021 அன்று மாலை 5 மணிக்கு சிங்கத்தகுரிச்சியில் உள்ள சர்வே எண் 234 மற்றும் 235 ல் காற்றாலையை துாக்கும் வேலையை செய்து கொண்டிருந்தார்கள்.நான் பொறுப்பாக நின்று பார்த்துக்கொண்டிருந்தேன்.1 மற்றும் 2 வது எதிரிகள் அதை தடுத்தார்கள் நான் வேலையை தடுக்காதீர்கள் என்று சொன்னேன். எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர் காரில் இருந்து ஒன்றரை இச் அளவில் உள்ள 3 அடி நீளம் உள்ள இரும்பு ராடு பைப்பை கொண்டு வந்து என்னை அடிக்க ஓடினார்கள்.என்னை தரக்குறைவாக 1 வது எதிரி தேவடியா மவனே,கூதிமவனே என்று கெட்ட வார்த்தையில் பேசி கொண்டு என்னை ராடை கொண்டு அடிக்க வந்தார் நான் லாவகமாக குனியவும் அருகில் இருந்தவர்கள் எதிரிகளை பிடித்து விலக்கிவிட்டாாகள்.1 மற்றும் 2 எதிரிகள் 3 வது எதிரி துாண்டி விட்டதன் பேரில் தாங்கள் வந்ததாக சொன்னார்கள்.3 வது எதிரி இதே கம்பெனியில் செக்காரக்குடியில் சரள் அடிக்கும் வேலை செய்துவருகிறார் நான் சிங்கத்தகுரிச்சியில் அந்த கம்பெனிக்காக சரள் அடித்தது 3 வது எதிரிக்கு பிடிக்கவில்லை.

3)என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான்.அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையதுதான்.நான் சிங்கத்தகுரிச்சியில் இருந்து 5 கிலோமீட்டர் தூரம் நடந்தே வந்து புளியம்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். **(மேற்படி புகாா மனு அசா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**இந்த சம்பவம் கருப்பசாமி, குமார் மற்றும் சுரேஷ் ஆகியோர்களுக்கு தெரியும்.போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் கையொப்பம் மட்டும் செய்ய தெரியும். புகாரினை எழுதியது யார் என்றால் எங்கள் கம்பெனியின் வழக்கறிஞர் சுடலைமணி நான் சொல்ல சொல்ல புகார் எழுதப்பட்டது.Cape கம்பெனிக்கு சரள் அடித்த விஷயத்தை புகார் மனுவிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை.15.03.2021 தேதி மாலை 5 மணிக்கு காற்றாடியை கிரேன் மூலம் தூக்கியதை நான் பார்வையிட்டு கொண்டிருந்தேன் என்று புகார் மனுவிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2)ஒன்றரை இச் பைப் என்று குறிப்பிட்டு புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் கம்பி என்று மட்டும் சொல்லியுள்ளேன்.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் வட இந்தியர்கள் 20 பேர் இருந்திருப்பார்கள்.சம்பவ இடத்தில் சுரேஷ் ,கருப்பசாமி மற்றும் குமார் ஆகியோர் இருந்தார்கள்.சம்பவ இடத்தில் சுடலை மணி இருந்ததாரா என்றால் இல்லை.சரள் அடிப்பதற்கு ஒப்பந்தம் போடப்பட்டதற்கான ஆவணம் எதுவும் போலீசார் விசாரணையில் கொடுத்தேனா என்றால் இல்லை.

3)சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் கண்டெயினர் பெட்டி அருகில் என்றால் இல்லை. கண்டெயினர் பெட்டி அன்றைய தினம் அங்கு இல்லை.சம்பவம் காற்றாடியின் இறக்கையை ஒட்டி நடந்தது.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று 1வது எதிரி பாலகிருஷ்ணனை நான் தாக்கியதாக சொல்லி தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4)1 வது எதிரி பாலகிருஷ்ணன் இடம் சம்பவ இடத்திற்கு முன்பாக உள்ளது என்றால் சம்பவ நேரத்தில் 1 வது எதிரி அங்கு இடம் வாங்கவில்லை.புகார் கொடுத்த போது சுடலை மணி உடன் இருந்தார்.சம்பவ இடத்தில் இருந்த குமாரை விசாரித்தால் இந்த வழக்கு சம்பவம் பற்றி தெரிய வரும் என்றால் சரிதான்.இரும்பு கம்பியை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை,1 வது எதிரி Bolero காரில் இருந்து எடுத்து வந்து கம்பியை ஓங்கி விட்டு மீண்டும் காரின் உள்ளேயே கம்பியை சொருகி வைத்துவிட்டார்.மேற்படி விஷயத்தை புகாரிலும் போலீசார் விசாரணையிலும் தெரிவிக்கவில்லை.

5)1 வது எதிரி பாலகிருஷ்ணன் இடத்தின் வழியாக காற்றாலை நிறுவனத்திற்கான பொருட்கள் வாகனத்தில் கொண்டு வந்ததால் அதை அவர் தட்டி கேட்டார் என்றாலும் அதற்காக நான் 1 வது எதிரியை அடித்துவிட்டேன் என்றாலும் 1 வது எதிரி சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் சேர்ந்தார் என்றாலும் என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவும் 2 வது சாட்சி சுரேஷின் தூண்டுதலினாலும் நான் பொய்யான இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல,இந்த வழக்கிற்கு பின்னால் தான் 1 வது எதிரி இந்த இடத்தை வீம்புக்காக வாங்கியுள்ளார்.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் புஞ்சை இடம் ஆகும்.

6) நான் சொன்ன மாதிரி நான் சொன்ன இடத்தில் எதிரிகள் என்னை பேசவில்லை என்றாலும் எதிரிகள் என்னை அடிக்க கம்பியை ஓங்க வில்லை என்றாலும் 1 வது எதிரி அவர்களை தூண்டிவிடவில்லை என்றாலும் சரியல்ல.சர்வே எண் 234 மற்றும் 235 ஆகிய இடங்கள் எங்கள் நிறுவனத்திற்கு சொந்தமானது என்று காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் நான் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.அது வடநாட்டு முதலாளியிடம் உள்ளது.அவரை விசாரித்தால் தான் இந்த இடம் யாருடையது என்பது தெரிய வரும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.